**17.09.2025**

**O.S.No.115/2024**

**வா.சா.1 : ராமசாமி**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலத்தை ஆககிரமிப்பு செய்தவாக கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆக்கிரமிப்பை அகற்ற கோரி நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சர்வே 195/2E அதில் 1.15 ஏக்கர் அதாவது 46 ஹெக்டேர் உள்ளது. 9 அடி அகலம் 14 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லிவிட்டு சாட்சி பின்னிட்டு 9 அடி அகலம் 400 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்கிறார். ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அளவீட்டின் செக்குபந்தி என்னவென்றால் பழனிமுத்து கவுண்டருக்கு நிலத்திற்கு வடக்கு புறம், சென்ன கவுண்டர் நிலத்திற்கு தெற்கு, பள்ளி கொண்டான் நிலத்திற்கு மேற்கே, சென்ன கவுண்டர் நிலத்திற்கு கிழக்கே உள்ளது. மேற்சொன்ன செக்குபந்திக்குள் தான் ஆக்கிரமிப்பு உள்ளது.

2) 2016ம் வருடம் டமேற்சொன்ன சொத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள். 195/2E அதில் 1.15 ஏக்கர் நிலத்தின் செக்குபந்தி என்னவென்றால் மேலே சொன்ன நிலத்திற்கு செக்குபந்திதான் என்னுடைய நிலத்திற்கும் செக்குபந்தி. மேற்படி செக்குபந்தி சொல்லி தான் மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பிராதிலும் என்னுடைய முதல் பிரமாண வாக்குமூலத்திலும் இது மாதிரி செக்கு பந்தி சொல்லி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாகப்பிரிவினை மூலம் மேற்படி சொத்து பாத்யிப்பட்டது. 04.04.1990 ல் பாகப்பத்திரம் ஆகும். எனக்கும் அண்ணன் பிச்சமுத்துவுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது. மேற்படி சொத்து எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது. அவர் கிரயம் மூலம் வாங்கினார்.

3) என்னுடைய தகப்பனாருக்கு வந்த கிரயப்பத்திரத்தில் வா.சா.ஆ.1ல் 2ஏக்கரில் 1 ஏக்கர் மட்டுமே கிரயப்படி பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் எழுதிய

பாகப்பிரிவினை பத்திரத்தில் 1 ஏக்கர் 15 செண்ட் நிலம் என எழுதி இருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய குடும்பத்திற்கே 1 ஏக்கர் மட்டுமே பாத்தியப்பட்டுள்ள நிலையில் குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து 1 ஏக்கர் 15 செண்ட்டுக்கு 04.04.1990 தேதியிட்ட வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரம் எழுதியது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கே சம்மந்தம் இல்லாமல் அனுபவம் இல்லாத சொத்தை கிரயப்பத்திரத்தில் வராத விஸ்தீரணம் இல்லாத சொத்தை பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றும் அது அமுலுக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மூல ஆவணத்திற்கு வா.சா.ஆ.1 க்கு எதிராக வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டுள்ளதால் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக விளிம்புகை பரிகாரம் கோருவது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் அப்பா அனுபவித்து வந்ததை நான் அனுபவித்து வருவதாக சாட்சி சொல்கிறார். எனது அப்பா 1 ஏக்கர் நிலத்தை தான அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அதை தான் நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். 1 ஏக்கர் நிலத்திற்கு மேல் உள்ள சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கு பத்திரத்தை அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டடுள்ளதா அல்லது பட்டா அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இரண்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டப்படி மூல ஆவணத்தின் அடிப்படையில் தான் ஆவணம் உருவாக்கப்படவேண்டும் என்றும் அதற்கு மாறாக உருவாக்கப்பட்ட பட்டா சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்.195/2E ன் ஆரம்ப கால சர்வே எண்.195/2 என்றால் சரிதான். 195/2 என்பது 195/2A,2B,2C,2D,2E என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பகுதியில் எனக்கு 15 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்து இல்லாமல் 7 ஏக்கர் நிலம் உள்ளது. சின்னசாமிக்கு முக்கால் ஏக்கர் இருக்குமா என்றால் தோராயமாக 1 ஏக்கர் இருக்கும். 2 வது பிரதிவாதிக்கு சுமார் 1 ஏக்கர் நிலம் இருக்கும் என்றால் 1,2

பிரதிவாதிகள் சேர்ந்து சுமார் 1 ஏக்கர் நிலம் இருக்கும். 195/2 உட்பிரிவினது UDR காலத்தின்போது தவறுதலாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி அந்த உட்பிரிவுகளின் போது மூல ஆவணத்திற்கு எதிராக அதிக விஸ்தீரணம் காண்பித்து பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

5) UDR பட்டாவில் ஏற்பட்ட தவறுகளை திருத்தம் செய்ய கோரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பிரதிவாதிகள் தொடர்ச்சியாக மனுதாக்கல் செய்து வந்துள்ளார்கள் என்றும் வருவாய் துறை நடவடிக்கையில் இருந்து தப்பிப்பதற்காக நான் இந்த சிவில் வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. RDO அலுவலகத்தில் இருந்து விசாரிக்க எனக்கு அறிவிப்பு எதுவும் வந்ததா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதனால் என்னால் வர இயலாது என்று சொல்லி உள்ளேன். எனக்கு பட்டா விசாரணை சம்மந்தமாக RDO அலுவலகத்தில் இருந்து விசாரிக்க எனக்கு அறிவிப்பு வந்தது என்றும் வருவாய் துறை விசாரணைக்கு ஒத்துழைக்காமல் நான் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து இழுத்தடித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6) RDO அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகி என் வசம் உள்ள ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் என் பெயரில் தவறான பட்டா ஏற்பட்டுள்ளது தெரிந்து விடும் நான் விசாரணைக்கு ஆஜராவதை தவிர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட 195/2 ல் இருக்கக்கூடிய 195/2A,2B,2C,2D ஆகிய சொத்துக்களை அளந்து காண்பிக்க கோரி நில அளவையர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார்கள் என்று சொன்னால் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் நிலத்தை அளக்க கோாரி வந்தார். வழக்கு தீர்ப்பாகும் வரை அளக்கக்கூடாது என்று சொன்னேன். எனது மூல பத்திரப்படி எனது தகப்பனாரின் சொத்தை நீதிமன்றம் மூலம் அளக்கலாமா என்றால் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். அது நிலத்தை பார்வையிடத்தான் போடப்பட்டுள்ளது. நிலத்தை அளப்பதற்காக போடப்படவில்லை. நீதிமன்றத்தின் மூலம்

நிலத்தை அளக்க நீதிமன்ற ஆணையர் நியமிக்க தயாராக இருக்கிறீர்களா என்றால் வழக்கு இவ்வளவு நாள் நிலுவையில் இருப்பதால் தற்போது அளக்க முடியாது. இரு தரப்புக்கும் இடையே உள்ள பிரச்சனையை சுமூகமாக முடிப்பதற்காக நீதிமன்ற ஆணையரை நியமித்து அளந்து பிரச்சனையை தீர்க்க தயராக உள்ளேனா என்றால் வழக்கு இவ்வளவு நாள் நிலுவையில் இருப்பதால் அளக்க தயாராக இல்லை. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும்.

7) பிரதிவாதிகளுக்கு சொத்து அபகரிக்கும் நோக்கில் நான் நீதிமன்றத்தின் மூலமாக கூட நீதிமன்ற ஆணையரை நியமித்து அளந்து பிரச்சனையை தீர்க்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க மறுக்கிறேன் என்றும் கிராம பஞ்சாயத்துக்கும் ஒத்துழைக்க மறுக்கிறேன் என்றும் வருவாய் துறை நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைக்க மறுக்கிறேன் என்றும் இதில் இருந்து சட்ட விரோத செயல்பாடுகள் நீதிமன்றத்தில் தெரியவருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனது பக்கத்தில் நியாயம் இருந்து இருந்தால் வழக்கு தாக்கல் செய்த அன்றே நிலத்தை சர்வேயர் மூலமாக அளந்து காண்பிக்க நடவடிக்கை எடுத்து இருப்பேன் என்றும் எனது பக்கம் நியாயம் இல்லாத காரணத்தினால் தான் வழக்கு சொத்தை பார்வையிட மட்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரை கூட்டிகொண்டு காட்டிய இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை என்றும் வேறு இடத்தை என்னுடைய இடம் என்று சொல்லி காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) நீதிமன்ற ஆணையரை கூட்டிக்கொண்டு சென்ற இடம் ராமசாமியின் சொத்து தான் என்று காண்பிக்க கிராம நிர்வாக அலுவலர் உடன் இல்லை என்றும் எனவே அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு என்பதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 195/2E க்கு கிழக்கே பழனியம்மாள் நிலம் உள்ளது என்றால் சரிதான். பழனியம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் தான் பிரதிவாதிகள் பாதை அமைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும் அதை தான் நான் எனது நிலம்

என்று உரிமை கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது நிலத்தை ஒருபோதும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் பிரதிவாதிகளின் நிலத்தை தான் நான் ஆக்கிரமிப்பு செய்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பழனியம்மாள் நிலத்தில் பாதை உள்ளதா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கீழ்புறம் 14 அடி தடம் உள்ளது. அந்த தடம் பழனியம்மாளுக்கு உரிமையானது என்று சொன்னால் இல்லை. தடமே கிடையாது. பழனியம்மாளுக்கு இடமே கிடையாது. நான் சொல்லும் 14 அடி பாதை பழனியம்மாளுக்கு பட்டாபடி பாத்தியப்பட்டது என்றும் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பழனியம்மாளின் நிலம், எனது நிலம் அருகில் இருப்பவர்கள் நிலம் ஆகியவற்றை அளந்தால் தான் இந்த பிரச்சனைக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.09.17 18:03:35 +0530

**Subordinate Judge, Attur.**